முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

O.S. No.39/2020. தேதி 20.12.2024

வாதி தரப்பு சாட்சி -1 (தண்டபாணி, த/பெ. வேணுகோபால் ) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-**

1. பாகப்பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள 3ம் இன சொத்தானது 100x27-1/2 அடி தவிர வேறு எந்த உரிமையும் எனக்கு கிடையாது என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்து விவரத்தில் 3ம் இன சொத்தில் எனக்கு 100x27-1/2 அடி தான் பாத்தியமானது என்று தெரிவித்துள்ளேனா என்றால் மொத்தமாகத்தான் தெரிவித்துள்ளேன். வா.த.சா.அ.1 ன் அடிப்படையிலேயே தாவா சொத்திற்கு உரிமை கோருகிறேன் என்றால் சரிதான். வா.த.சா.அ.2 உயிலை ஆதாரமாக வைத்துத்தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் அப்பாவின் பாகப்பத்திரத்தை வைத்தும் உயிலின் அடிப்படையிலும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.
2. வா.த.சா.ஆ.2 உயில் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. என் சகோதரல் கோதண்டபாணிக்கு 1. மனோகர் 2.தாமோதரன் 3.ராஜாராம் என 3 மகன்கள் மகாலட்சுமி என்று ஒரு பெண் என்றால் சரிதான். இவர்கள் அனைவரும் முதல் தாரத்தின் பிள்ளைகள் என்றால் சரிதான். கோதண்டபாணியின் 2ம் மனைவி பெயர் சுந்தரி அவரது ஒரே மகன் பாலசுப்ரமணியன் என்றால் சரிதான். மேற்கூறியவர்களை வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.
3. ஒரு கூட்டுப்பட்டாவில் அனைவரும் சேர்ந்து மனு செய்தால் தான் உட்பிரிவு செய்து தனிப்பட்டா வழங்கப்படும் என்றால் அது பற்றிய விவரம் எனக்கு தெரியாது. வா.த.சா.ஆ.3 ஐ உட்பிரிவு செய்து தனிப்பட்டா வழங்கக்கோரி நான் மனு எதுவும் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிருரையில் என்னை உட்பிரிவு செய்து கொள்ளச் சொல்லி கூறிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் கூறியுள்ள அம்சங்கள் அனைத்தும் தவறானது என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

மறு விசாரணை இல்லை.